HINDU TAMIL

PAGE NO: 03 DATE: 23.07.2021

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் சார்பில்

# லட்சத் தீவுகளில் புதிய தொழிற்கல்வி படிப்புகள்

● நடப்பு கல்வியாண்டில் தொடக்கம்

■ புதுச்சேரி

புதுவை மத்திய பல்கலைக்கழகம் சார்பில் நிகழ் கல்வியாண்டு முதல் லட்சத் தீவுகளில் புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இந்தப் படிப்புகளுக் கான தடையில்லா சான்றிதழ்கள் வழங்குகின்ற விழா பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கொள்கை அளவிலான அனுமதி கடிதங்களை வழங்கினார். லட்சத்தீவு நிர்வாகம், தொழிற்கல்வி மற்றும் திறன் மேம் பாட்டுத் துறைச் செயலர் விஜேந்திர சிங் ராவத் மற்றும் கல்வி அதிகாரி சித்திக் அலி ஆகியோர் இதனை பெற்றுக் கொண்டனர்.

அதன்படி லட்சத் தீவுகளில் உள்ள காட்மேட் மற்றும் மினி காய் தீவுகளில் சுற்றுலா மற்றும் சேவை, மென்பொருள் துறைகளில் இளநிலைப் பட்டப் படிப்புகள், உணவு பரிமாறுதல் மற்றும் விருந்தோம்பல், கடல் பொறியியல், மின்சாரம் மின்னணு மற்றும் இயந்திரவியல் ஆகிய துறைகளில் தொழிற்கல்விச் சார்ந்த புதிய பட்டயப் படிப்புகள் நிகழாண்டு (2021 - 2022) முதல் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன.



▲ இலட்சத்தீவுகளில் புதிய படிப்புகளுக்கான கொள்கை அளவிலான அனுமதி கடிதங்களை புதுவைப் பல்கலை. துணைவேந்தர் குர்மீத் சிங் வழங்கினார். லட்சத்தீவு நிர்வாகம், தொழிற்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைச் செயலர் விஜேந்திர சிங் ராவத், கல்வி அதிகாரி சித்திக் அலி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

முன்னதாக நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங், "கடலோர தீவுகளில் வசித்து வருகின்ற பழங்குடியின மாணவர் களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே புதிய இளநிலை தொழில் மற்றும் பட்டயப் படிப்புகள் இந்தியா வில் முதன்முறையாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

கடலோர தீவுகளில் வசித்து வருகின்ற இளைஞர்களிடம் திறன்க ளும், இயற்கை வளங்கள் குறித்த அறிவாற்றலும், தன்னம்பிக்கையும் உள்ளன. இவர்களுக்கான புதிய தொழில் சார்ந்த படிப்புகளை உருவாக்குவதன் வாயிலாக மாணவர்களின் திறன்கள் மேம் படுகின்றன. மனித ஆற்றலைக் கல்வி முறைக்குள் கொண்டு வரப்படுவதால் தீவுகளில் வசிக்கும் மாணவர்கள் உயர் கல்வி பயில் வதற்கும், சொந்தமாகத் தொழில் தொடங்குவதற்கும், வெளிநாடுக ளுக்கு செல்வதற்கும் வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படுகின்றன. இந்த வாய்ப்புகளை தீவுப்பகுதிகளில் வசித்து வருகின்ற மாணவர்கள் பயன்படுத்திக் கொண்டு முன்னேறி கல்வித்துறையில் சாதித்து இந்தி யாவிற்குப் பெருமையைத் தேடித் தர வேண்டும்" என்றார்.

நிகழ்வின் போது புதுச்சேரி பொறியியல் தொழில்நுட்பக் கல் லூரி பேராசிரியர் சிவராஜ், பல் கலைக்கழக கல்லூரி மேம்பாட்டுக் குழு புல முதன்மையர் (பொறுப்பு) சந்திரசேகர ராவ், பதிவாளர் முனை வர் சித்ரா, அந்தமான் நிகோபார் தீவுகளுக்கான கல்வி மைய இணைப்பு அதிகாரி ராஜ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

"THE NEW INDIAN EXPRESS"

PAGE NO: 05

DATE: 23.07.2021

# Pondy Univ grants NOC to Lakshadweep

**EXPRESS NEWS SERVICE** @Puducherry

THE Pondicherry University has issued No Objection Certificate (NOC) and in-principle approval to Lakshadweep UT Administration to start Bachelor of Vocation (B Voc) courses at Kadmat Island and diploma courses at Minicoy Island of the UT.

According to a release from the University the Union Territory of Lakshadweep, the administration has proposed to introduce three-year Under Graduate courses and one-year diploma programmes from the upcoming academic year 2021-2022 with the affiliation of Pondicherry University. Accordingly, based on the proposal, the NOC has been issued for UG courses in Tourism & Service Industry and Software Development and diploma in Catering and Hospitality, Marine, Electrical and Electronics and Mechanical Engineering.

Vice-Chancellor of Pondicherry University Gurmeet Singh was the Chief Guest.